இல்லம் செய்தி மடல்

VOLUME O1 ISSUE 2006/3 JULY – SEPTEMBER 2006

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு வெளியீடு

# வீடமைப்பு மீள்நிர்மாணப் பணிகளின் துரித முன்னேற்றத்துக்கான படிக்கற்கள்

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணப் பணிகளில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் முன்னணியில் திகழ்கின்றன. வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகூடுதலான வீடுகள் (2525) கட்டம் II இன் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு அம்பாறை மாவட்டத்தில் 1000 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. வீடமைப்பு மீள்நிர்மாணத் துறையில் இந்த இரண்டு மாவட்டங்களினதும் செயற்பாட்டுத்திறனானது மெச்சக்கூடியதாக வுள்ளது. இந்த இரு மாவட்டங்களினதும் இயற்கை, பௌதீகவியல், சமூகவியல், பொருளியல் மற்றும் நிர்வாகவியல் ஆகியவற்றின் தனித்துவங்களே துரித முன்னேற்றத்திற்கான படிக்கற்களாக திகழ்வதாக ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களும் கரையோர மாவட்டங்களாகும். இரண்டு மாவட்டங்களுமே இயற்கையின் கோரங்களை இலகுவில் ஜீரணிக்க முடியாத நலிவுற்ற தன்மை கொண்டவை. பொங்கியெழும் கடல்அலை, கட்டுக்கடங்காப் பெருவெள்ளம், சுழன்றடிக்கும் சூறாவளி, கொடுமையான வரட்சி போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு இலகுவில் இலக்காகுபவை. மக்கள் நிரந்தரமான வதிவிடங்களை அமைத்து நிம்மதியாக வாழ்வதற்கு இவை பெரும் தடைக்கற்களாக விழங்குகின்றன.

1957 இல் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம், 1978 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் சூறாவளி, 2004இல் வடக்கு கிழக்கை அச்சுறுத்திய சுனாமிப் பேரலை போன்ற இயற்கை நிகழ்வுகள் இம் மாவட்டங்களில் நிரந்தர வதிவிடங்களை அமைப்பதற்கு அச்சுறுத்தலாக விளங்கின.அத்துடன் இம் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் அழிவுற்றுப்போவதற்கும் இந்த இயற்கை நிகழ்வுகள் காரணமாக அமைந்துவிட்டன.கடந்த இரண்டு தசாப்பதங்களுக்கு மேலாக இவ்விருமாவட்டங்களிலும்இடம்பெற்றுவரும் இனமுரண்பாடுகளும், போர் நடவடிக்கைகளும் இருப்பிடங்கள் அழிவுற்றுப் போவதனை



மேலும் உக்கிரப்படுத்தியுள்ளன. இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் 11342 வீடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 57,943 வீடுகளும் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளன. பெருந்தொகையான இந்த வீடுகளில் 13% மானவற்றை வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் 2809 வீடுகளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 7651 வீடுகளையும் 2005 ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகாலப்பகுதிக்குள் மீள்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் போரினால் அழிவுற்ற 34784 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக உலகவங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கத்திற்குக் கடனாகவும், ஐரோப்பிய ஆணைக்குழு 6மில்லியன் யூரோக்களை நன்கொடையாகவும் வழங்கியுள்ளன.மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட வீடு மீள்நிர்மாணப் பணிகளின் தேவையினை ஈடுசெய்யக்கூடிய வகையிலே, இம்மாவட்டங்களின் இயற்கை வளம் அமைந்திருப்பது நிர்மாணப் பணிகள் துரிதகதியில் இடம்பெறுவதற்கு காரணமாக விழங்குகின்றன.

தொடர்ச்சி............ 8 பக்கம்

# வாழ்த்துச் செய்திகள்



**திரு.எச்.எம்.ஹேரத் அபேவீர,**

**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**

**அம்பாறை மாவட்டம்**

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தினால் வெளியிடப்படும் ''இல்லம்'' சஞ்சிகைக்கு இந்தச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வ.கி.வீ.மீ.திட்டமானது அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாகும் என்பதனை தெரியப்படுத்த விரும்புகிறேன். இத்திட்டமானது கொடுக்கப்பட்ட நியமங்களுக்கேற்ப, பயனாளி தனது விருப்பத் தேர்வுக்கேற்ற வகையில் தனது வீட்டினை அமைத்துக்கொள்வதற்கான சுதந்திரத்தை அவனுக்கு வழங்குகின்றது.

கடந்த வருடம் அம்பாறை மாவட்டத்தில், 07 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 309 வீடுகளை நேர்ப் வெற்றிகரமாக நிர்மாணித்துள்ளது. இந்த வருடம் (2006 ல்) முப்பெரும் இனங்களும் இணைந்து வாழ்கின்ற 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிர்மாணப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன. பயனாளிகள் மிக்க ஆர்வத்துடன் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பயனாளிகளில் 998 பேர் இரண்டாவது தவணைக் கொடுப்பனவையும், 697 பேர் மூன்றாவது தவணைக் கொடுப்பனவையும் 28பேர் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து நான்காவது கொடுப்பனவையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு சாதனையாகும்.

நேர்ப் திட்டம் யுத்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கான வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு உதவும் அதேவேளை அது 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுனாமிப் பேரலைகாரணமாக அழிவுற்ற வீடுகளையும் மீள்நிர்மாணம் செய்வதில் கரிசனையுடன் செயலாற்றிவருகின்றது.

வ.கி.வீ.மீ. திட்டப் பணியாளர்களை, விசேடமாக அம்பாறை மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளரையும் அவரின் உதவிப் பணியாளர்களையும் நான்பெரிதும் வாழ்த்துகிறேன். அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதன் பொருட்டு நியமிக்கப்பட்ட இலக்கினை நோக்கி அவர்கள் தொடர்ந்து செயற்பட வேண்டுமென அவர்களை நான் உற்சாகப்படுத்துகின்றேன்.



**ஜனாப் எஸ்.அன்வர்டீன்**

**பிரதித் திட்டப் பணிப்பாளர்**

**அம்பாறை மாவட்டம்**

உணவு உடை போன்று வீடும் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். புகலிடம், ஒதுக்கிடம், பாதுகாப்பிடம் என அழைக்கப்படும் வீடானது ஒரு குடும்பத்தின் தேவை மட்டுமல்லாது சமுதாயத்தின் தேவையாகவும் காணப்படுகின்றது. வீடு என்பது வானத்தின் கீழ் கூரையை அமைத்து வாழ்வதனை மட்டும் குறித்து நிற்கவில்லை. அது ஒரு குடும்பத்தின் இலட்சனையாகவும் விளங்குகின்றது.

''எலி வளையானாலும் தனி வளை வேண்டும்'' என்ற முது மொழிக்கு அமைவாக இலங்கையின் வடக்குகிழக்கு மக்கள் தமது வசதிக்கு ஏற்ப வீடுகளை அமைத்து வாழ்க்கை நடாத்தி வந்தனர். வடக்குகிழக்கில் கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற போரினால் சுமார் 40 இலட்சம் வீடுகள் அழிக்கப்பட்டன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இக்காலப்பகுதியில் 11342 வீடுகள் அழிக்கப்பட்டதாக மதிப்பீடு செய்யப்பட்டது. இது வடக்கு கிழக்கில் வீடற்றோர் பிரச்சினையை உத்வேகமடையச் செய்தது.

இலங்கையில் நிலவும் வீடற்றோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் 1976 ம் ஆண்டு வான்கூவரில் நடைபெற்ற முதலாவது குடியிருப்பு மகாநாட்டிற்கு முன்பிருந்தே ஓரளவு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1980 ல் ஒரு இலட்சம் வீடமைப்புத்திட்டம், 1984 ல் பத்து இலட்சம் வீடமைப்புத்திட்டம், தொகுதிவாரி வீடமைப்புத்திட்டம், நகர வீடமைப்புத்திட்டம், கிராமிய வீடமைப்புத்திட்டம், மீனவர் வீடமைப்புத்திட்டம் என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவை எதுவும் போரினால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்தவில்லை. இவ்விடயம் நன்கு உணரப்பட்டு, போரினால் சேதமடைந்த வீடுகளையும் சமுதாயத்தையும் மீளமைப்பதற்காக உருவான திட்டமே வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 309 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டன. இந்த ஆண்டு 36 கிராமங்களில் 1000 வீடுகள் மீள்நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. வீடமைப்பு நன்மை கிடைத்ததை இம்மக்கள் மிகவும் சந்தோசமாக ஏற்று நிர்மாணப்பணியில் முழு ஈடுபாட்டுடன் செயற்படுகின்றனர். இத்தகைய மக்கள்பாங்கான ஒரு திட்டத்தில் கடமையாற்றுவதையிட்டு நானும் பெருமகிழ்வுறுகின்றேன். போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கும் அக்குடும்பங்கள் இழந்து நின்ற மன அமைதியை ஏற்படுத்துவதன் மூலம் சமூக அமைதியை ஏற்படுத்த விளையும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் வெற்றிக்கு அம்பாறை மாவட்டத்தில் நன்மை பெறும் பயனாளிகள் சார்பாகவும் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் சார்பாகவும் எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



**செ.புண்ணியமூர்த்தி**

**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**

**மட்டக்களப்பு மாவட்டம்**

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள்தொகை கூடிய மாவட்டங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும். இங்கு கடந்த 23 வருட காலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக பல கிராமங்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்து உள்ளன. இதனால் பல உட்கட்டுமானங்கள் உட்பட அடிப்படைத் தேவைகள் எதுவும் இன்றியே இங்கு மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கம்பு, தடியினால் அமைக்கப்பட்ட கொட்டில்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தனியே அரசாங்க வரவு செலவுத் திட்ட நிதி போதுமானதாக இல்லை. எனவேதான் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தினூடாக மட்டக்களப்பில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் வடகிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் சிறந்த முறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. உண்மையில் இத்திட்டம்தான் மக்களின் அடிப்படைத் தேவையான வசிப்பிடத்துக்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளும் திட்டமாகும். இத்திட்டம் கடந்த வருடம்(2005) ஆரம்பிக்கப்பட்டு தற்போது இரண்டாம் கட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இத்திட்டம் வடக்குகிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். வீடுகள் அழிவடைந்த கிராமங்கள் சில இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பினும் தற்போதய நெருக்கடி நிலை காரணமாக அங்கு திட்டத்தை அமுல்படுத்துதல் பிற்போடப்பட்டுள்ளது, அக்கிராமங்களையும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதனை மகிழ்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத் திட்டம், பயனாளிகளே தங்கள் வீடுகளை தாங்களே நிர்மாணம் செய்யும் திட்டம் என்பதனால் அவர்கள் அவ் வீடுகளை கட்டுவதற்காக தங்கள் நாள் கூலியினை இழக்கவேண்டியுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் 96 நாட்களுக்கான உலர் உணவு, திட்டப்பயனாளி குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது என்பதனையும் திட்டப்பயனாளிகளுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



**திருமதி.க.நந்தினி**

**பிரதித் திட்டப் பணிப்பாளர்**

**மட்டக்களப்பு மாவட்டம்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் மக்கள் தங்கள் இல்லிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். தங்கள் உடைமைகளை இழந்துள்ளனர். தொடர்ந்தேர்ச்சியாக தொழிலை இழந்துள்ளனர். அவர்கள் தமது சேமிப்பை இழந்துள்ளனர். நிர்க்கதியாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய ஒரு நிலையில் மீண்டும் அவர்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் முகமாக இவ் வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வீடமைப்புத் திட்டத்தின் முதலாம் கட்ட, இரண்டாம் கட்ட தெரிவில் பலர் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் இத்திட்டம் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளுக்கு தொடரும் செயற்திட்டமாகும். மொத்தமாக 7553 வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்நிர்மாணம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் எண்ணக்கரு மிக எளிமையானது. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ரூபா இரண்டரை இலட்சம், நான்கு தவணைகளில் நிதிமானியமாக வழங்கப்படுகின்றது. இது வீட்டுடைமையாளர் நிர்மாணச் செயற்றிட்டம் (Home Owner Driven Programme) எனும் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தும் திட்டமாகும்.

இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பயனாளி தம்முடைய ஆற்றல்,செயல்,முயற்சி,சேமிப்பு என்பவற்றைக் கடைப்பிடித்து தனது வீட்டை தனது குடும்ப கலாசார விழுமியங்களுக்கு தகுந்தாற்போல் தானே அமைத்துக்கொள்ளும் திட்டமாக விளங்குகின்றது. தற்போது நடைமுறையாண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 77 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 90 கிராமங்களில் 2525 வீடுகள் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த இரு தசாப்த காலமாக அழிந்து நலிவுற்றுப்போன கிராமங்களையும் அக்கிராம மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களையும் மீள்கட்டுமானம் செய்யும் இத்திட்டத்தில் அனைவரும் ஒன்றாக இணைந்து தோழோடு தோள்கொடுத்து ஒத்துழைப்பு வழங்குவோமாக.

# நன்றி தெரிவிக்கும் பயனாளிகள்

## நன்றி கூறும் பக்கீர் முகைடீன் ஹச்சி முகம்மது



மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி, 2ஆம் குறிச்சியிலுள்ள அந்த வீடு மிகச் சுறு சுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது.வீட்டில்

ஏதேனும் விசேட நிகழ்ச்சியோ என ஐயுறும் அளவிற்கு கலகலப்பாகக் காணப்படுகிறது. ஆண்களும் பெண்களுமாக அங்கு துரிதமாக இயங்கிக்கொண்டிருக்கின்றனர்.

புதிதாகக் கட்டியெழுப்பபட்ட அந்த வீடு, குறித்த ஒரு சமூகத்தின் கலாசாரப் பின்னணியை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. வீட்டின் முன்புறத்தில் மலசலகுழி ஒன்றினைக் கட்டும் பணி இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

### குடும்பத்தின் மூத்த உறுப்பினர் ஹச்சி முகம்மது மலர்ந்த முகத்துடன் எங்களை வரவேற்று உரையாடியபோது :

" நான் ஒரு மீன்வியாபாரி. சைக்கிள் வண்டியில் பெட்டி மீன் வியாபாரம் செய்து வருகிறேன். இந்தத் தொழிலில் முன்னர் நான் கணிசமான வருமானம் பெற்றேன். இப்போது யுத்த நிலைமைகள் காரணமாக மீன்பிடித் தொழில் வீழ்ச்சியடைந்துவிட்டது. அதனால் மீன் வியாபாரமும் படுத்துவிட்டது. வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது மிகக் கஷ்டமாக உள்ளது.

எனக்கு 5 பிள்ளைகள். ஐந்து பேரும் வளர்ந்து பெரியவர்களாகிவிட்டனர். ஒரு மகன் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவாகிவிட்டார். இருந்தபோதும் நாங்கள் யாவரும் -ஒன்பது பேரும் - ஒரு சிறு குடிசையி-லேயே வாழ்ந்து வருகிறோம் . சொல்லமுடியாத அளவு துன்பதுயரங்களை தினமும் நாங்கள் சந்தித்து வருகிறோம். யுத்தம் காரணமாக பலதடவைகள் நாங்கள் இடம்பெயர்ந்து சென்றோம். இந்த நிலையில்தான் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றினைக் கட்டுவதற்கான உதவி கிடைத்தது. எனது வீட்டில் உணவுக்குப் பஞ்சமிருந்தாலும் உடல் உழைப்பிற்குப் பஞ்சமிருக்கவில்லை. நாங்கள் ஒன்பது பேரும் சேர்ந்து பாடுபட்டு உழைத்து இந்த வீட்டைக் கட்டி முடித்திருக்கின்றோம்.

சிறு குடிசையில் வாழ்ந்துவந்த பெருங்குடும்பத்தவனான எனக்கு வீட்டுத்திட்டம் ஒரு நம்பிக்கை ஒளியாக விளங்குகின்றது. என்னிடமுள்ள சிறுபணத் தொகையையும் முதலிட்டு இந்த வீட்டை நாங்கள் கட்டிமுடித்திருக்கிறோம். உலக வங்கியின் நிதிஉதவி கிடைக்காவிட்டால் இப்படி ஒரு வீட்டை நிர்மாணிப்பதுபற்றி கனவுகூடக் கண்டிருக்கமாட்டோம். அதனால் உலகவங்கிக்கும், வீடமைப்புத் திட்டத்திற்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாவோம்" என அவர் நன்றிப் பெருக்குடன் கூறினார்.

## நம்பிக்கையுடன் மனம் திறக்கிறார் கதீஜா உம்மா......



"நான் அலியார் கதீஜா உம்மா. நானும் எனது இரண்டு பேரப்பிள்ளைகளும் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் சாளம்பைக்கேணி 4ம் கிராமத்தில் வசித்து வருகின்றோம். எனது மகனுக்கு ஐந்து பிள்ளைகள். அதில் 03 பிள்ளைகள் இரத்த நோயினால் சிறு வயதிலேயே இறந்துவிட்டார்கள். எனது மகனின் மனைவியும் இறந்து விட்டார். மகனோ வேறு திருமணம் முடித்து வேறிடத்திற்குச் சென்றுவிட்டார். நானும் எனது பேரப்பிள்ளைகள் இருவரும் சிறு குடிசை ஒன்றிலேயே வாழ்ந்து வருகிறோம். இந்த இரு பேரப்பிள்ளைகளும் வலது குறைந்தவர்கள். வாய் பேச முடியாதவர்கள். பிறப்பிலிருந்தே என்னுடன் வாழ்ந்து வருகின்றார்கள். வறுமையில் வாழ்ந்தாலும் இவர்களைக் குணப்படுத்த எடுக்காத முயற்சியே இல்லை. வைத்தியர்கள் சொல்கிறார்கள் இந்த நோய் இரத்த உறவுத் திருமணத்தால் ஏற்பட்டது, குணப்படுத்துவது மிகக் கடினம் என்று. நோயின் தாக்கம் ஒரு பக்கம். வீடில்லை என்ற ஏக்கம் மறுபக்கம். நான் கண்மூடினால் இவர்களை யார் கவனிப்பார்கள் என்று ஏங்காத நாட்கள் இல்லை. அப்போதுதான் நேர்ப் திட்டம் எனது கிராமத்திற்கு வந்தது. நானும் விண்ணப்பித்தேன். எனக்கு வீடு ஒன்றைக் கட்டுவதற்கான உதவி கிடைத்தது. கஷ்ரப்பட்டு வீட்டைக் கட்டிமுடித்து விட்டேன். இப்பொது நான்மிகவும் சந்தோசத்தோடு இருக்கிறேன். நான் கண்மூடினாலும் மனநிலையில் பாதிக்கப்பட்ட எனது இரண்டு பேரப்பிள்ளைகளும் உறங்குவதற்கு ஒரு நிரந்தரமான வீடு கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கை, புத்துணர்வு எனக்குள் ஏற்பட்டுள்ளது."

## அபலையான எனது கண்ணீருக்குக் கிடைத்த மகத்தான பரிசு



அம்பாறை மாவட்டத்தில் சங்கமன்கந்த என்ற கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார் ரஞ்சினி என்ற பெண் பயனாளி கூறுகையில்,

"உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம், யுத்தத்தினால் விடுகள் இழந்த மக்களுக்கு அவர்களின் வீடுகளை மீள்நிர்மாணம் செய்ய உதவுவதாகக் கூறி எங்கள் வாசிகசாலையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. நானும் அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். திட்டம் பற்றி அந்தக் கூட்டத்தில் விளக்கமாகக் கூறினார்கள்.

மாலையில் எனது குடிசைக்கு வந்து "போம்" ஒன்றைத் தந்து அதை நிரப்பித்தருமாறு கேட்டார்கள். நானும் அதனை நிரப்பிக்கொடுத்தேன். இரண்டு வாரங்களின் பின்னர் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பெயர்ப்பட்டியல் வாசிகசாலையில் ஒட்டப்பட்டிருப்பதாக அறிந்து ஓடிச்சென்றேன். குழுமிநின்று பட்டியலைப் பார்த்துக்கொண்டிருந்த சனங்களை முட்டித்தள்ளிக்கொண்டு அதனை அணுகினேன். திரும்பத்திரும்ப மூன்று தடவைகளுக்கு மேல் பட்டியலை நான் வாசித்தேன். என்னுடைய பெயர் அதில் இருக்கவில்லை. எனது தலையிலடித்தபடி நான் அங்கிருந்தகொண்டே கதறி அழுதேன். எனது மனம் ஆறவில்லை, குமுறிக் கொண்டே இருந்தது. அடுத்த நாள் என்னுடைய கணவரையும் நான்கு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு அட்டாளைச்சேனையிலுள்ள திட்ட அலுவலகத்திற்கு ஓடினேன். என்னுடைய அவலக்கதையையும் நிலையையும் அங்குள்ள பெரியவருக்குக் கூறினேன்.

நான் அஷ்ரப் என்பவரை மணமுடித்து இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தேன். கணவர் 1996 ஆம் ஆண்டு எங்களைத் தவிக்கவிட்டு மரணமாகிவிட்டார். நாளாந்த சாப்பாட்டிற்கே வழியற்றுத்தவித்த எனக்கு விஜயகுமார் மறுவாழ்வுதர முன்வந்தார். அவருக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்தன. நாங்கள் ஆறுபேரும் ஒரு சிறுகுடிலிலேயே வசிக்கின்றோம். ஒருநேரச் சோற்றிற்கே வழியற்றுத்தவிக்கும் எங்களுக்கு வீடு தராமல் வேறு யாருக்கு வீடு கட்ட உதவப்போகிறீர்கள் எனக் கதறி அழுதேன்.

பெரியவர் மனம் நெகிழ்ந்தார். எனக்கு ஆறுதல் கூறினார். எனது முதல்கணவரின் மரணச் சான்றிதழை கொண்டுவந்து தரும்படி கூறினார். நானும் மிகச் சிரமத்தின் மத்தியில் மரணச்சான்றிதழைக் கொண்டு சென்று அவருக்குக் காட்டினேன். திட்டத்தின் கீழ் வீடுகட்ட உதவி செய்வதாக எனக்கு அடுத்த வாரமே கடிதம் வந்தது. என்னால் நம்பவே முடியவில்லை. நானும் கணவரும் பிள்ளைகளும் இரவுபகலாக வேலை செய்தே இந்த வீட்டைக் கட்டியெழுப்பியிருக்கின்றோம். கணவன் கூலித்தொழிலுக்கு செல்வதால் நான் பகலில் வேலை செய்வேன். கணவன் கூலிவேலையால் திரும்பிய பின் இரவு நேரங்களில் வேலைசெய்கிறார். போராடினால் பெண்களும் வெற்றி பெறலாம் என்பதற்கு இந்த வீடு ஒரு நல்ல சாட்சி. எனது கண்ணீருக்கும், போராட்டத்திற்கும் கிடைத்த மகத்தான ஒரு பரிசாகவே இந்த வீட்டை நான் பார்க்கிறேன்" என அழுதவாறு அவர் கூறினார்.

## எதிர்பாராமல் கிடைத்த மிகப்பெரும் பேறு




அம்பாறை மாவட்டத்தில் சங்கமன்கந்த என்ற கிராமத்ததைச் சேர்ந்த செம்பன் கன்னியம்மா என்ற பயனாளி கூறுகையில் " எனக்கு 60 வயதாகிறது. 18 வருடங்களுக்கு முன்னர் எனது 42 ஆவது வயதில் நான் விதவை யானேன். என்னுடைய மூன்று குழந்தைகளையும் நான் வளர்ப்பதற்கு மிகவும் சிரமப்பட்டேன். கல்லுடைத்தும் விறகுவெட்டி விற்றும் கிடைக்கின்ற வருமானத்தின் மூலம் இந்தக் குழைந்தைகளுக்கு அரைவயிற்றுக் கஞ்சியாவது தரமுடிகிறது. இதன் மத்தியில் என்னுடைய மகன் ஒருவன் சுனாமிப் பேரலையில் அகப்பட்டு கையுடைந்த நிலையில் இருக்கிறான். மிகச் சிறிய ஓர் ஓலைக் குடிசையிலேயே நாங்கள் வசித்து வந்தோம்.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் நிரந்தரமாக வீடு ஒன்றினைக் கட்டுவதற்கான உதவி எனக்குக் கிடைத்துள்ளது. இந்த வீட்டைக் கட்டியெழுப்புவதற்கு எங்கள் குடும்பத்திலுள்ளள நான்குபேரும் மாடாய் உழைக்கின்றோம். மேசன் ஒருவரைத் தவிர வேறெவருக்கும் நாங்கள் கூலி கொடுப்பதில்லை. எனது வாழ்க்கையில் எதிர்பாராமல்கிடைத்த மிகப்பெரும் பேறாக இந்தவீட்டை நான் கருதுகிறேன். மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் பனியில் வாடியும் வாழ்ந்த வாழ்க்கைக்கு முடிவுகிட்டியுள்ளது. எங்களுக்கு பாதுகாப்பான வாழ்விடம் கிடைத்தது மட்டுமல்ல, என்னுடைய வயது வந்த பெண்பிள்ளைக்கு விவாகம் செய்து வைக்கும் பாக்கியமும் இந்த வீட்டுத்திட்டத்தின் மூலமே எனக்குக் கிட்டியுள்ளது" என்றார்.

# அம்பாறை,மட்டக்களப்பு மாவட்டம் பிரதேச செயலாளர் பிரிவுகள்

## மட்டக்களப்பு

01. மண்முனை வடக்கு
02. காத்தான்குடி
03. மண்முனைப்பற்று
04. மண்முனை தெற்கு எருவில்பற்று
05. போரதீவுபற்று
06. மண்முனை தெற்கு மேற்கு
07. மண்முனை மேற்கு
08. ஏறாவூர் நகரம்
09. ஏறாவூர் பற்று
10. கோறளைப்பற்று
11. கோறளைப்பற்று மேற்கு
12. கோறளைப்பற்று வடக்கு
13. கோறளைப்பற்று மத்தி
14. கோறளைப்பற்று தெற்கு



## அம்பாறை

01. அட்டாளைச்சேனை
02. அக்கரைப்பற்று
03. ஆலையடிவேம்பு
04. அம்பாறை
05. தமண
06. தெஹியத்தகண்டிய
07. கல்முனை (மு.பி)
08. கல்முனை (த.பி)
09. சாய்ந்தமருது
10. காரைதீவு
11. லகுகல
12. மஹாஓயா
13. நிந்தவூர்
14. பதியத்தலாவ
15. பொத்துவில்
16. சம்மாந்துறை
17. நாவிதன்வெளி
18. இறக்காமம்
19. திருக்கோவில்
20. உகண


## அம்பாறை மாவட்டத்தில் கிராமரீதியாக வீடுகள் ஒதுக்கீடு - கட்டம் II

| தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் | தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் | | ஒதுக்கப்பட்ட வீடுகள் | |
|---|---|---|---|---|
| | ச.அ.நி | ஐ.ஆ | ச.அ.நி | ஐ.ஆ |
| அட்டாளைச்சேனை | 02 | - | 85 | - |
| அக்கரைப்பற்று | 02 | - | 61 | - |
| ஆலையடிவேம்பு | 04 | - | 109 | - |
| இறக்காமம் | 02 | - | 57 | - |
| காரைதீவு | 04 | - | 50 | - |
| லகுகல | 01 | - | 30 | - |
| மஹாஓயா | 02 | - | 50 | - |
| நாவிதன்வெளி | 08 | 01 | 169 | 40 |
| பொத்துவில் | 02 | 01 | 78 | 40 |
| சம்மாந்துறை | 03 | - | 42 | - |
| திருக்கோவில் | 04 | - | 88 | - |
| உகண | 04 | - | 101 | |
| மொத்தம் | 38 | 02 | 920 | 80 |


## மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமரீதியாக வீடுகள் ஒதுக்கீடு - கட்டம் II

| தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் | தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் | | ஒதுக்கப்பட்ட வீடுகள் | |
|---|---|---|---|---|
| | ச.அ.நி | ஐ.ஆ | ச.அ.நி | ஐ.ஆ |
| ஏறாவூர் பற்று | 16 | 03 | 316 | 108 |
| கோறளைப்பற்று | 01 | - | 54 | - |
| கோறளைப்பற்று மத்தி | 03 | - | 51 | - |
| கோறளைப்பற்று வடக்கு | 01 | - | 94 | - |
| கோறளைப்பற்று மேற்கு | 01 | - | 22 | - |
| கோறளைப்பற்று தெற்கு | 25 | - | 368 | - |
| மண்முனை தெற்கு எருவில்பற்று | 02 | - | 56 | - |
| மண்முனை தெற்கு மேற்கு | 14 | - | 404 | - |
| மண்முனை மேற்கு | 09 | 06 | 205 | 100 |
| மண்முனைப்பற்று | 01 | 01 | 71 | 26 |
| போரதீவுபற்று | 12 | - | 650 | - |
| மொத்தம் | 85 | 10 | 2291 | 234 |

## வ.கி.வீ.மீ.நி.திட்டம், அம்பாறை மாவட்டம் - நிதி முன்னேற்றம் 13.10.2006 ல் உள்ளபடி




## வ.கி.வீ.மீ.நி.திட்டம், மட்டக்களப்பு மாவட்டம் - நிதி முன்னேற்றம் 13.10.2006 ல் உள்ளபடி



# வெளிநாட்டில் பயிற்சி பெற்றனர்



ஜனாப்.எஸ்.அன்வர்டீன்
பிரதித் திட்டப்பணிப்பாளர்
அம்பாறை மாவட்டம்



திருமதி.க.நந்தினி
பிரதித் திட்டப்பணிப்பாளர்
மட்டக்களப்பு மாவட்டம்



திரு.வி.சாம்பசிவம்
பிரதித் திட்டப்பணிப்பாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

தாய்லாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் 2006 ஆகஸ்ட் 5ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை இடம்பெற்ற இடர்முகாமைத்துவம் என்னும் குறுகியகால சர்வதேச பயிற்சிநெறியில், அம்பாறை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சிநெறியானது இடர்கால சவால்களை இனங்காணல், மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் பற்றிய திட்டமிடுதல் தொடர்பாக அதில் பங்குகொண்ட பணியாளர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் அவுஸ்திரேலியா AUS-HS நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டதாகும்.

இதேவேளை 2006 செப்டெம்பர் 9 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதிவரை தாய்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற நிதியீட்டம் மற்றும் உட்கட்டமைப்பு, அடிப்படைச் சேவைகளை வழங்குதல் தொடர்பான குறுகியகால சர்வதேச பயிற்சிநெறியில் மட்டக்களப்பு மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி.க.நந்தினி கலந்துகொண்டார். இந்தப்பயிற்சி நெற-யியானது வறுமையை நிவர்த்திசெய்தல் மற்றும் அதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பாக பணியாளர்களின் திறன்கள் மற்றும் அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் அவுஸ்திரேலியா AUS-HS நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டதாகும்.

# இனம் மற்றும் பிரதேசங்களுக்கிடையிலான இணைப்புப் பாலம் !



ஆர்.எம்.எஸ். பிரியந்தி ஆகிய நான் பிறப்பால் ஒரு சிங்களப் பெண்ணாவேன். எனது பிறந்த இடம் மட்டக்களப்பாகும்.

நான் நான்காம் ஆண்டுவரை தமிழ்மொழிமூலமே கல்வி கற்றேன். அதனால் தமிழும் சிங்களமும் எனது இரு கண்கள் போலவே கருதுகின்றேன். எனது மூன்று பிள்ளைகளும் சரளமாக இரு மொழிகளையும் பேசுகின்றனர். எனது கணவர் கூலித்தொழிலாளி. அவரும் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

1985 ஆம் ஆண்டு மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள அறந்தலாவை என்னுமிடத்தில் குடியமர்ந்தோம். இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக நாங்கள் மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குத் திரும்பிச் சென்றோம். மீண்டும் 1991 ஆம் ஆண்டில் அங்கிருந்து இடம்பெயர்ந்து அறந்தலாவையில் நிரந்தரமாகக் குடியமர்ந்திருக்கின்றோம்.

சிறு குடிசையில் வாழ்ந்து கொண்டு அங்குமிங்குமாக அலைந்து திரிந்த எனக்கு வ.கி.வீ.மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் நிரந்தர வீடொன்றை அமைப்பதற்கு நிதி உதவி கிடைத்துள்ளது. நான் எனது குடும்பத்துடன் நிரந்தரமாகக் குடியமர்வதற்கு ஒரு வாய்ப்பினைத் தந்துதவியமைக்காக வ.கி.வீ.மீ. திட்டத்திற்கு என்றும் நன்றியுடையேன். இந்த மாத முடிவிற்குள் எனது வீடு முற்றாகக் கட்டிமுடிக்கப்பட்டுவிடும். அதன்பின்னர் நாங்கள் மிகவும் சந்தோசமாக அந்த வீட்டில் குடியிருக்கத் தீர்மாணித்துள்ளோம்.

என்னைப் பொறுத்தவரையில் இனம், மதம், மொழி, பிரதேசம் எனபன சமூகங்களுக்கிடையிலான பிரிகோடாக ஒருபோதும் விளங்கப்போவதில்லை என்பதனை உறுதிபடக் கூறுகின்றேன்.

## உங்களுக்குத் தெரியுமா?

## அம்பாறை மாவட்டத்தின் நிலப்பயன்பாடு

### அம்பாறை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு

**493188 ஹெக்டர்**

| | | |
|---|---|---|
| இதில் மக்கள் குடியிருக்கும் நிலம் | (40847 ஹெக்டர்) | - 8.30% |
| விவசாயத்திற்குப் பயன்படுவது | (139983 ஹெக்டர்) | - 28.43% |
| காடு | (184257 ஹெக்டர்) | - 37.32% |
| புதர் மற்றும், சேற்று (ஈரலிப்பு) நிலம் | (76403 ஹெக்டர்) | - 15.45% |
| நீர் நிலை | (51698 ஹெக்டர்) | - 10.50% |
| **மொத்தம்** | **493188 ஹெக்டர்** | **- 100%** |

*தகவல் : மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 2005*

## உங்களுக்குத் தெரியுமா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் (2004) சுனாமிப் பேரலையால் அழிவுற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை – 21,036.

சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்குள்ளான 8 பிரதேசசெயலாளர் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை - 87

இக் கிராமங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை :

| | |
|---|---|
| அ. கடல் பாதுகாப்பு வலயம் 200 மீற்றருக்குள் முற்றாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் | - 3446 |
| ஆ. கடல் பாதுகாப்பு வலயம் 200 மீற்றருக்கு வெளியே முற்றாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் | - 11679 |
| இ. கடல் பாதுகாப்பு வலயம் 200 மீற்றருக்கு வெளியே முற்றாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் | - 5911 |
| **மொத்தம்** | **- 21036** |


*தகவல் : மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 2005*

## ஒரே பார்வையில் வ.கி.வீ.மீ.திட்ட பணிகளின் முன்னேற்றம் - 30.09.2006 இல் உள்ளபடி


### வீடுகள் ஒதுக்கீடு கட்டம் - II

| மாவட்டம் | கட்டம் II | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | | |
| | ச.அ.நி | ஐ.ஆ | மொத்தம் |
| யாழ்ப்பாணம் | 2,165 | 225 | 2,390 |
| கிளிநொச்சி | 1,500 | 00 | 1,500 |
| வவுனியா | 380 | 34 | 414 |
| மன்னார் | 295 | 32 | 327 |
| திருகோணமலை | 1,766 | 238 | 2,004 |
| மட்டக்களப்பு | 2,291 | 234 | 2,525 |
| அம்பாறை | 920 | 80 | 1000 |
| மொத்தம் | 9,317 | 843 | 10160 |


### மாவட்ட ரீதியில் நிதி அடைவு மட்டம் கட்டம் - II





### மாவட்ட ரீதியில் பௌதீகஅடைவு மட்டம் ஆயத்த முற்பணம் - கட்டம் - II





### மாவட்ட ரீதியில் பௌதீகஅடைவு மட்டம் அத்திவாரம் நிறைவுற்றது - கட்டம் - II





### மாவட்ட ரீதியில் பௌதீகஅடைவு மட்டம் சுவர் மட்டம் நிறைவுற்றது - கட்டம் - II




### மாவட்ட ரீதியில் பௌதீகஅடைவு மட்டம் கூரை மட்டம் நிறைவுற்றது - கட்டம் - II





### மாவட்ட ரீதியில் பௌதீகஅடைவு மட்டம் வீடு பூரணப்படுத்தப்பட்டது - கட்டம் - II




### மொத்த நிதிக்கொடுப்பனவு - 2006

### (ச.அ.நி + ஐ.ஆ + இல.அரசு)



# திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (Skill Training Programme)

## மட்டக்களப்பு மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டம் ஒன்றின்போது (2005) 501 வீடுகள் கட்டப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இருந்தும் மேசன், தச்சுத் தொழிலாளர்களின் பற்றாக்குறையினை இனம்கண்ட திட்டப்பணிப்பாளர், கட்டம் இரண்டில் இக் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன் காரணமாகத் தற்போது இலங்கை அரசினதும், உலகவங்கியினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்வரும் நான்கு இடங்களில் திறன் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



1. மண்முனை தென் மேற்கு - பட்டிப்பளை
2. ஏறாவூர் பற்று - இலுப்பட்டிச்சேனை
3. போரதீவுப் பற்று - தும்பங்கேணி
4. கோறளைப் பற்று தெற்கு - கிரான்

இப் பயிற்சி நிலையங்களில் 68 மேசன் மற்றும் 89 தச்சுத் தொழிற் பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்து வெளியேறி திட்டத்தின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இப் பயிற்சிகளுக்கென சிறப்பான பாடவிதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 3 மாதங்களுக்கு வழங்கப்படும் இப்பயிற்சியின்போது நவீன இலத்திரனியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மிக்க நலிவுற்ற பயனாளிகளின் வீடு நிர்மாணப்பணிகளில் இவர்களுக்கு வெளிக்களப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதன்மூலம் நலிவுற்ற பயனாளிகளுக்கு மேசன், தச்சுத்தொழில்களுக்கான கூலியை மீதப்படுத்தமுடிகிறது.

பயிற்சி பெறுவோர் பயனாளிகள் குடும்பத்திலிருந்தே தெரிவுசெய்யப்படுகின்றனர். இவர்களின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டும், பயிற்சியின்போது இவர்கள் இழக்கும் நாட்கூலியைக் கவனத்திற்கொண்டும், பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 300/= ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு இரண்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன. எதிர்காலத்தில் தமது தொழிலைத் தொடர்வதற்காக இவர்களுக்கு உபகரணத் தொகுதி ஒன்றும் சான்றுப்பத்திரமும் வழங்கப்படுகின்றன. இந்தப் பயிற்சி நெறிகள் தொடர்ந்து இடம்பெறுமாயின் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கட்டடத்தொழிலாளர் பற்றாக்குறை விரைவில் நீக்கிவிடும். அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்த வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்திற்கே அந்தப்பெருமையும் உரியதாகும்.

### பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கி.உ.பிரிவு, நிலப்பரப்பு, குடும்பங்கள், குடித்தொகை, அழிவடைந்த வீடுகள் பற்றிய விபரம்

### அம்பாறை மாவட்டம்

| இல | பி.செ.பிரிவு | கி.சே.பிரிவு எண்ணிக்கை | மொத்த நிலப்பரப்பு சதுர கிமீ | குடும்பங்கள் எண்ணிக்கை | குடித்தொகை 2004 | அழிவடைந்த வீடுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முற்றாக | பகுதியாக | மொத்தம் |
| 01 | அட்டாளைச்சேனை | 32 | 52.5 | 9436 | 38247 | 334 | 232 | 566 |
| 02 | அக்கரைப்பற்று | 28 | 102.2 | 9899 | 37100 | - | 503 | 503 |
| 03 | ஆலையடிவேம்பு | 22 | 127.5 | 5677 | 24026 | 630 | 45 | 675 |
| 04 | அம்பாறை | 22 | 225.0 | 8497 | 40526 | - | 1026 | 1026 |
| 05 | தமண | 33 | 426.2 | 9617 | 37528 | - | 520 | 520 |
| 06 | தெஹியத்தகண்டிய | 14 | 432.5 | 18752 | 67860 | 15 | 213 | 228 |
| 07 | கல்முனை (மு.பி) | 28 | | 11545 | 12045 | - | 241 | 241 |
| 08 | கல்முனை (த.பி) | 29 | 66.9 | 8319 | 44600 | 88 | 558 | 646 |
| 09 | சாய்ந்தமருது | 17 | | 5432 | 30522 | - | 828 | 828 |
| 10 | காரைதீவு | 17 | 31.3 | 4578 | 17377 | - | 1964 | 1964 |
| 11 | லகுகல | 12 | 616.9 | 2419 | 8094 | 100 | - | 100 |
| 12 | மஹாஓயா | 17 | 600.0 | 4690 | 19244 | - | 750 | 750 |
| 13 | நிந்தவூர் | 25 | 55.6 | 7429 | 18120 | - | 138 | 138 |
| 14 | பதியத்தலாவ | 20 | 464.4 | 4945 | 26148 | - | 76 | 76 |
| 15 | பொத்துவில் | 27 | 367.5 | 9576 | 16959 | 443 | 90 | 533 |
| 16 | சம்மாந்துறை | 51 | | 13762 | 30241 | 745 | 280 | 1025 |
| 17 | நாவிதன்வெளி | 20 | 256.7 | 5479 | 25605 | 1706 | - | 1706 |
| 18 | இறக்காமம் | 12 | | 3024 | 54695 | 342 | 47 | 389 |
| 19 | திருக்கோவில் | 22 | 190.6 | 7963 | 25165 | 1255 | 300 | 1555 |
| 20 | உகண | 57 | 415.6 | 14313 | 55862 | 88 | | 88 |
| | மொத்தம் | 505 | 4431.4 | 165352 | 629964 | 5746 | 7811 | 13557 |

### பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கி.உ.பிரிவு, நிலப்பரப்பு, குடும்பங்கள், குடித்தொகை, அழிவடைந்த வீடுகள் பற்றிய விபரம்

### மட்டக்களப்பு மாவட்டம்

| இல | பி.செ.பிரிவு | கி.சே.பிரிவு எண்ணிக்கை | மொத்த நிலப்பரப்பு சதுர கிமீ | குடும்பங்கள் எண்ணிக்கை | குடித்தொகை 2004 | அழிவடைந்த வீடுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முற்றாக | பகுதியாக | மொத்தம் |
| 01 | மண்முனை வடக்கு | 48 | 75.09 | 22,767 | 85,557 | 892 | 148 | 1040 |
| 02 | காத்தான்குடி | 18 | 3.89 | 10,733 | 40,421 | 465 | 330 | 795 |
| 03 | மண்முனைப்பற்று | 27 | 31.72 | 8,262 | 30,284 | 2587 | 2118 | 4705 |
| 04 | மண்முனை தெற்கு எருவில்பற்று | 45 | 52.5 | 15,466 | 57,444 | 4720 | 1122 | 5842 |
| 05 | போரதீவுபற்று | 43 | 167.2 | 15,466 | 57,444 | 6566 | 2939 | 9505 |
| 06 | மண்முனைதெற்கு மேற்கு | 24 | 161.6 | 6,576 | 25,378 | 3219 | 230 | 3449 |
| 07 | மண்முனை தெற்கு | 24 | 292.7 | 7,894 | 30,597 | 4329 | 1901 | 6230 |
| 08 | ஏறாவூர் நகரம் | 17 | 3.74 | 8,378 | 35,278 | 901 | 132 | 1033 |
| 09 | ஏறாவூர் பற்று | 39 | 634.16 | 17,903 | 74,966 | 4584 | 7850 | 12434 |
| 10 | கோறளைப்பற்று | 12 | 484.5 | 6,083 | 24,459 | 3484 | 17 | 3501 |
| 11 | கோறளைப்பற்று மேற்கு | 08 | 176.0 | 6,953 | 27,043 | 374 | 1825 | 2199 |
| 12 | கோறளைப்பற்று வடக்கு | 16 | 550.0 | 5,436 | 21,202 | 2126 | - | 2126 |
| 13 | கோறளைப்பற்று மத்தி | 09 | புதிதாக உருவாக்கப்பட்டவை அளவீடு செய்யப்படவில்லை | 7,227 | 28,460 | 835 | 229 | 1064 |
| 14 | கோறளைப்பற்று தெற்கு | 18 | | 8,350 | 36,952 | 6408 | 174 | 6582 |
| | மொத்தம் | 348 | 2633.1 | 147,494 | 575,485 | 41,490 | 19,015 | 60,505 |

#### உங்களுக்குத் தெரியுமா?

அம்பாறை மாவட்டத்தின் காடுகளிலிருந்து உயர்தரமான முதிரை, பாலை, தேக்கு போன்ற மரங்கள் பெறப்படுகின்றன. இந்த மரங்கள் மரக்குற்றிகளாகவும், விறகாகவும், கம்பங்களாகவும், தளபாட உற்பத்திகளுக்காகவும் தேசிய மரக்கூட்டுத்தாபனத்தால் மக்களுக்கு விற்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் இவ்வாறு விற்கப்பட்ட மரத்தின் பெறுமதி ரூபா 64952595 ஆகும். (ஆறு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஐந்து ரூபா)

தகவல் : மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 2005

#### உங்களுக்குத் தெரியுமா?

அம்பாறை மாவட்டமே மிக அதிகமான பிரதேச செயலாளர் பிரிவுகளை (20) கொண்டுள்ளது. இந்த 20 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 165352 குடும்பங்கள் வசிக்கின்றன. இதில் 80430 குடும்பங்கள் மட்டுமே நிரந்தரமான வீடுகளைக் கொண்டுள்ளன. 25020 குடும்பங்கள் அரைநிரந்தர வீடுகளையும் கொண்டுள்ளன. மேம்படுத்தப்பட வேண்டிய வீடுகள் 30440, ஏனையவை 2760. இவ்வாறான வீடுகளின் மொத்த எண்ணிக்கை 138650. எனவே இம் மாவட்டத்தில் மேலும் 26702 குடும்பங்கள் சொந்த வீடுகளின்றியே வாழ்கின்றன.

தகவல் : மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 2005

## சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் கட்டம் I அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பிரதேச செயலக ரீதியாக மீள்நிர்மாணம் செய்யப்படும் வீடுகள்

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமங்களின் எண்ணிக்கை | வீடுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | முற்றாக சேதம் | பகுதியாக சேதம் |
| அம்பாறை | திருக்கோவில் | 17 | 1339 | 1847 |
| | பொத்துவில் | 15 | 1110 | 783 |
| | ஆலையடிவேம்பு | 06 | 06 | 57 |
| | அக்கரைப்பற்று | 06 | 181 | 785 |
| | அட்டாளைச்சேனை | 19 | 50 | 974 |
| | நிந்தவூர் | 12 | 66 | 1448 |
| | காரைதீவு | 11 | 699 | 402 |
| **உப மொத்தம்** | | **86** | **3451** | **6296** |
| | | | | |
| மட்டக்களப்பு | ஆரையம்பதி | 11 | 1766 | 773 |
| | வாழைச்சேனை | 05 | 637 | 222 |
| | வாகரை | 13 | 1704 | - |
| | களுவாஞ்சிக்குடி | 30 | 2914 | 2529 |
| | காத்தான்குடி | 03 | 1550 | 1208 |
| **உப மொத்தம்** | | **62** | **8571** | **4732** |
| **மொத்தம்** | | **148** | **12022** | **11028** |

## வ.கி.வீ.மீ.திட்ட செயற்பாடுகளுக்கு வ.கி.சிங்கள மக்கள் மத்தியில் பெரு வரவேற்பு



திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை காலமும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலிருந்து புறந்தள்ளப்பட்டிருந்த சிங்கள விவசாயிகள் வாழ்கின்ற குக்கிராமங்களிலும் வ.கி.வீ.மீள்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இத்தகைய இரண்டு கிராமங்களில் வீடமைப்பு மீள்நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அவரது வேண்டுகோளையடுத்து பப்புறுகஸ்வெவ, புலிகண்டிக்குளம் ஆகிய இரண்டு கிராமங்களும் வீடமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டன.

இக் கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதலாவது கொடுப்பனவை வழங்கும் வைபவம் கோமரங்கடவெல பிரதேசசெயலாளரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில், பிரதேச செயலாளர், அரச அதிகாரிகள், பிரதேசசபைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் கிராம அடிப்படை நிறுவனங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் வீடமைப்பு மீள்நிர்மாணப் பணிகளையும் விதந்து பாராட்டினர்.

1ம் பக்க தொடர்ச்சி......

இம் மாவட்டங்கள் இரண்டுமே நிர்மாணத்துறை சார்ந்த மூலவளங்களை பெருமளவில் உள்ளடக்கியிருக்கின்றன. இம் மாவட்டங்களின் மண்வளம் நிர்மாணத்துறைக்கு மிக்க பயனுடையதாக விளங்குகின்றது. இம் மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் கட்டட நிர்மாணத்தொழிலுக்கு அவசியமான மணல் மிக எளிதாகவும் தாராளமாகவும் கிடைக்கின்றது. மேட்டுப்பாங்கான வயல்நிலங்களில் இருந்து செங்கல் அரியும் தொழில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. நெல் பயிரிடாத காலங்களில் வயல்நிலங்களில் செங்கல் அரியும் தொழில் ஜீவனோபாயத் தொழிலாக இடம்பெற்று வருகின்றது. கிழக்கு மகாணத்தில் பரவலாகக் காணப்படும் குன்றுகள் மற்றும் பாறைகளில் இருந்து அத்திவாரத்திற்கு பயன்படுத்தப்படும் கருங்கல் இலகுவாகவும் மலிவாகவும் பெறப்படுகின்றுது.

இந்த இரண்டு மாவட்டங்களும் பரந்த நிலப்பரப்பையும் பெருமரங்கள் வளர்வதற்கு சாதகமான காலநிலையையும் கொண்டிருக்கின்றன. இத்தகைய மரங்களை வீட்டு வளவுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடிகின்றமை இம்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.

பருவகாலத் தொழில்களான விவசாயம், மீன்பிடி ஆகியவற்றைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் இவ்விருமாவட்டங்களினதும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள், சேமிப்புத் திறன் கொண்டவர்களல்லர். இத்தகையதொரு நிலையில் வ.கி.வீ.மீள்நிர்மாணத் திட்டம் வழங்கும் ரூபா 250,000/= ஐ நிலையான ஒரு சொத்து (வீடாக) உருவாக்குவதில் அவர்கள் அதீத ஆர்வம் காட்டுவது விந்தையான ஒன்றன்று. இவர்களின் ஆர்வத்தினை ஈடுசெய்யும் வகையில் மாவட்டத்தின் நிர்வாகத்திறன் கட்டியெழுப்பபட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையும், திட்ட நடைமுறைகளைப் பிறழாத வகையிலே அமுலாக்கவேண்டுமென்ற நிர்வாகிகளின் கண்டிப்பான செயலார்வமும் இவ்விரு மாவட்டங்களிலும் வீடமைப்பு மீள்நிர்மாணப்பணிக்கு படிக்கல்லாக அமைந்தன என்பதில் மிகையேதுமில்லை. மக்களின் இத்தகைய ஆர்வமும், நிர்வாகிகளின் செயற்திறனும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் துரித மீள்குடியேற்றத்தினை வெற்றியளிக்கச் செய்வதுடன், எதிர்காலத்தில் இம் மாவட்டங்களின் மிக்க காத்திரமான அபிவிருத்திப்பணிகள் மையம் கொள்வதற்கும் வழிவகுக்கும் என நம்பலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

### மட்டக்களப்பு மாவட்டத்தில் 2004ல் இடம்பெற்ற சுனாமிப் பேரலையினால் ஏற்பட்ட இன்னல்கள்

I தமது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் - 57729

அ. இதில் இடைத்தங்கல் குடும்பங்கள் - 46423

ஆ. நண்பர்களின் குடும்பங்களுடன் இணைந்து வாழும்குடும்பங்கள் - 11306

II பாதிக்கப்பட்டோர்

அ. மரணித்தோர் எண்ணிக்கை - 2836

ஆ. காயமுற்றோர் எண்ணிக்கை - 2375

இ . காணாமல் போனோர் எண்ணிக்கை - 1033

III. ஜீவனோபாயத்தை இழந்தோர் எண்ணிக்கை - 10405

IV. சொத்துக்கள் இழந்தோர் எண்ணிக்கை - 63717

V. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட அமைப்புக்களுக்கு நேர்ந்துள்ள இழப்பு - ரூபா.2783,495,743 (ரூபா. இருநூற்று எழுபத்தெட்டுக் கோடியே முப்பத்து நாலு இலட்சத்து தொண்ணூற் றையாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று)

*தகவல் : மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 2004*

வெளியீடு : வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்
பிரதம செயலாளர் செயலகம்
உட்துறைமுக வீதி , திருகோணமலை

தொலைபேசி : 026 -2224853, 026 -2227161
தொலைநகல் : 026 -2224854
மின்னஞ்சல் : pdnehrp@sltnet.lk